தேதி : 23.07.2025

அசல் வழக்கு எண் : 198/2020

வாதி தரப்பு சாட்சி 3 : திரு.சீனிவாசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**4வது பிரதிவாதிக்காக குறுக்கு விசாரணை**

வாதி சுலேகா என் உறவினர் கிடையாது. என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். வாதிகளின் தாத்தா பெயர் நாராயணரெட்டி. நாராயணரெட்டிக்கு எத்தனை பேர்கள் வாரிசுகள் என்றால் சுமார் 7–8 பேர்கள் இருப்பார்கள். நாராயணரெட்டியின் வாரிசுகள் எப்போது பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. வாதிகளின் தகப்பனார் விஜயாரெட்டிக்கு 4.5 ஏக்கர் ஒதுக்கப்பட்டதாக தெரியும். தாவா சொத்து ஜீஜீவாடி பஞ்சாயத்து சேர்ந்தது. அதன் சர்வே எண் 671/3 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள் என் பக்கத்து நிலத்துக்காரர்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களுடைய நிலத்துப் பக்கத்தில்எ னக்கு நிலம் கிடையாது. அவர்களுடைய வீட்டுப் பக்கத்தில் தான் என் வீடு உள்ளது. வாதிகளின் அப்பா விவசாய வேலை செய்து வருகிறார். வாதிகளின் தகப்பனார் தாவா சொத்தில் தான் விவாசய்ம செய்து வருகிறார். தாவா சொத்தில் வாதிகளின் தகப்பனார் தக்காளி மற்றும் பீன்ஸ் பயிரிட்டு வருகிறார். வாதிகளின் தம்பி ஸ்ரீநாத்ரெட்டி என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் தற்போது ஊரில் இல்லை. அவர் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. ஸ்ரீநாத்ரெட்டி வேறு சொத்துக்களை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகளுக்கு திருமணம் ஆகி 20 வருடங்கள் ஆகிறது. வாதிகளுக்கு திருமணம் ஆவதற்கு முன்பு அல்லது பின்பு தாவா சொத்து விற்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை விற்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிகளின்

அப்பா விஜயாரெட்டி அவருடைய தம்பி சிவப்பா ரெட்டி எப்போது பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து 20 வருடங்களாக தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளின் அப்பா தான் விவசாயம் செய்து வருகிறார். தாவா சொத்து சுற்றி பிளாட்டுக்கள் போட்டு வீடுகள் உள்ளது என்றாலும், தற்போது தாவா சொத்து தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பக்கத்தில் பிளாட்டுக்கள் போடப்பட்டுள்ளது என்றால் 2 பக்கங்களில் மனைகள் போடப்பட்டுள்ளது. 2 பக்கத்தில் வேறு யாரோ உள்ளார்கள். தாவா சொத்தில் போர் மற்றும் மின்சார இணைப்பு கிடையாது என்றால் சரிதான். வாதிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனக்கு தாவா சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- B.Santhosh,
Additional District Judge,
Hosur.